**தலைப்பு 245 – அரச நிதித் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 245 – அரச நிதித் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்து மூடிவிடும் நடவடிக்கைகளைச் செய்வதற்கான முற்பணக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்து மூடிவிடும் நடவடிக்கைகளைச் செய்வதற்கான முற்பணக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 77.27 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 65.11 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடுகளிலிருந்து ரூபா 12.16 மில்லியன் அதாவது 15.74 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 66.78 | 59.16 | 7.62 | 11.41 |
| மூலதனம் | 10.49 | 5.95 | 4.53 | 43.28 |
| மொத்தம் | **77.27** | **65.11** | **12.16** | **15.74** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 24501 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2.90 | 2.79 | 1.40 | 2.10 | 16.00 | 9.32 |

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

அரச நிதித் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்து மூடிவிடும் நடவடிக்கைகளைச் செய்வதற்கான முற்பணக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.1.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 29 ஆந் திகதிய 07/2015 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் (2) ஆம் பந்தியின் பிரகாரம் எரிபொருள் மற்றும் போக்குவரத்து போன்ற செலவின விடயங்களில் முறையே 15 சதவீதமும், 10 சதவீதமும் கட்டாய சேமிப்பைச் செய்ய வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த செலவின விடயங்களுக்கு மேலதிக நிதி ஏற்பாடாக முறையே ரூபா 3,500 மற்றும் ரூபா 832,700 தொகைகள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) 08 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதிஏற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 4 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

#### 3.1.2 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டு தொடர்பான கொடுப்பனவுகளின் பரீட்சிப்பின் போது வெளிப்பட்டப்பட்டதன் பிரகாரம், ரூபா 1,215,854 தொகையான பொறுப்புக்கள், பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 94(i) மற்றும் 2014 சனவரி 01 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் 6.4 ஆம் பிரிவின் பிரகாரம் கடப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு முன் அதற்கான உரிய செலவின விடயத்தில் போதியளவான நிதிஏற்பாடு காணப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான உறுதிப்படுத்தலின்றி ரூபா 443,960 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

### 3.2 முற்பணக் கணக்குகள்

**கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து மூடும் நடவடிக்கைகளைச் செய்வதற்கான முற்பணக் கணக்குகள்**

2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் திணைக்களத்தின் கீழுள்ள 02 கலைத்தல் கணக்குகளின் நடவடிக்கைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**3.2.1 வியாபார பொருட்களை கொள்வனவு செய்யும் திணைக்களத்தின் 0999-08 ஆம் இலக்க நிர்வாகச் செலவினம் உட்பட இறப்பர், தேயிலை, தென்னை உற்பத்தி ஏனையை வியாபார திரவியங்கள் மற்றும் போர்மிக் மற்றும் அசிட்டிக் அமிலம் கொள்வனவு மற்றும் விற்பனை தொடர்பான முற்பணக் கணக்கு**

---

1997 யூலை 16 ஆந் திகதிய 64 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்து மூடிவிடும் நடவடிக்கைகளை விரைவாகவும், நிதிப்பிரமாணம் 518(3) இன் பிரகாரம் இரண்டு ஆண்டுகளில் கொடுக்கல் வாங்கல்களை ஒடுக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் மேற்குறித்த முற்பணக் கணக்கில் கொடுக்கல் வாங்கல்களை மூடி விடுவதற்கான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.2.2 999/407 ஆம் விடய இலக்க விற்பனை அபிவிருத்தித் திணைக்களத்தின் உள்நாட்டு மற்றும் ஏனைய உற்பத்திகளைக் கொள்வனவு செய்து கூட்டிணைத்தல் மற்றும் விற்பனை, குளிரூட்டல் களஞ்சிய வசதிகளை வழங்கல் மற்றும் ஆரோக்கிய மண்டப வசதிகளை வழங்குவதற்கான முற்பணக் கணக்கு**

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1998 மே 20 ஆந் திகதிய 13 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரமும் நிதிப்பிரமாணம் 518(3) இன் பிரகாரமும் இரண்டு வருட காலங்களில் கணக்குகளைத் தீர்த்து மூடிவிடும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டு வரையில் 27 வருட காலம் கடந்திருந்த போதிலும், கலைத்தல் நடவடிக்கைகள் இதுவரை நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க காணி கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 454) 6(1) ஆம் பிரிவின் கீழ் விஷேட கொடுப்பனவுப் பத்திரத்தின் பிரகாரம் கையளிக்கப்பட்ட சொத்தொன்று நகர அபிவிருத்தி அதிகாரசபை தமது உபயோக பணிகளுக்குப் புறம்பாக ஈடுபடுத்துவதாயின் மீண்டும் அவ்வாதனங்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கு கையேற்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த சொத்துக்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

---

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகைகள் திட்டம்**

---

திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டு மதிப்பீட்டிற்கும் பெறுகைகள் திட்டத்திற்கும் இடையே ரூபா 600,000,000 வேறுபாடுகள் காணப்பட்டமையால் பெறுகைகள் திட்டம், பாதீட்டு மதிப்பீடு என்பன இணங்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

---

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சகல நிதியாண்டிலும் பெப்ரவரி 26 ஆந் திகதிக்கு முன்னர் பொது 47 அறிக்கையின் பிரகாரம் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு கையளிக்கப்படக் கூடிய பொருட்கள் (T) தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 இன் பொருள் மெய்மையாய்வின் போது T குறியீடு பயன்படுத்தப்பட்ட பொருட்கள் தொடர்பாக இதுவரை பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 செயலாற்றல்

---------------------

2016 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டின் திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் செயல்முன்னேற்றத்தினைப் பரீட்சிப்பதற்காக உரிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக பொறுப்பு வாய்ந்த 05 துறைகளுக்குரிய எதிர்பார்த்த பெறுபேற்றை அடைந்து கொள்ளல் / அதற்காக செயற்படல் போதியளவில் இருந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) 2013 இன் பாதீட்டு உரையில் வெளிப்படுத்தப்பட்ட நிதிப்பிரமாணக் கோவை திருத்தம் செய்யும் பணிகள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அது 2013 முதல் தொடர்ச்சியாக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டங்களில் பிரதான பணியாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் உரிய கோவைகளின் பிரகாரம், நிதிப்பிரமாணக் கோவை 2015 சனவரி மாதம் வரையில் அச்சிடல் முடிவடைந்திருந்தது. எனினும், அதனை அமுல்படுத்தல் தொடர்பாக திறைசேரி செயலாளரின் ஆலோசனை பெறவேண்டியமை அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான எந்தப் பணிகளும் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்படாதிருந்தமையால் உரிய பணிகள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப்பிரமாணம் 104 மற்றும் 113 இன் கீழ் நட்டம் மற்றும் பதிவழித்தல்கள் தொடர்பான நடவடிக்கைகளைச் செய்தல் திணைக்களத்தின் பணிகள் மற்றும் பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்ட பிரதான பிரிவாக இருந்ததுடன் திணைக்களப் பதிவேட்டின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 133.74 மில்லியன் தொகையான நட்டம் மற்றும் பதிவழித்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது அது ரூபா 807.40 மில்லியன் ஆனமையின் காரணமாக 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது அதிகரிப்பு ரூபா 673.66 மில்லியனாக அதாவது 504 சதவீதமாக இருந்தது. 2016 ஆம் ஆண்டில் ரூபா 807.40 மில்லியன் தொகையான இழப்பு, நட்டம் மற்றும் பதிவழித்தல் என்பன 2016 சனவரி 07 ஆந் திகதி ரூபா 2.87 மில்லியன் இராணுவத்தின் வாகனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தைப் பதிவழித்தலில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. செயலாற்றல் அறிக்கையில் இந்த மொத்தப் பதிவழித்தல்களும் பிழையானதாக ரூபா 153.53 மில்லியனாகக் குறைத்து அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஈ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அரசாங்க துறைகளுக்குரிய சகல சொத்துக்களுக்காகவும் தரவு அடிப்படையொன்று (Database) தயாரித்து பேணிச் செல்வதற்கும் தேசிய சொத்துப் பதிவேடொன்றைத் தயாரிப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான தரவு முறைமையொன்றோ அல்லது தேசிய சொத்துக்கள் பதிவேடொன்றோ பேணப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே தேசிய சொத்துக்கள் பதிவேடொன்றைப் பேணிச் செல்வதற்குரிய சுற்றறிக்கையேனும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அரச சொத்துக்களின் முகாமைத்துவத்திற்கான தகவல்களைச் சேமித்தல் மற்றும் காலப்பகுப்பாய்வு செய்தல் திணைக்களத்தின் ஒரு பணியாக இருந்த போதிலும், மேற்கூறப்பட்ட பிரகாரம் இது தொடர்பாக ஆண்டில் திட்டமிடப்பட்ட பணிகள் நிறைவேற்றப்படாமையின் காரணமாக, இந்த பணிகளுக்காகவும் வேறொரு அலுவலகமொன்றைத் தாபிப்பதற்கு வரிசை அமைச்சிற்கு ஏற்பட்டிருந்தது.

(உ) நிதிப்பிரமாணம் 153 இன் பிரகாரம் அரசாங்க கணக்குகள் குழுவின் அறிக்கை பெறப்பட்டதன் பின்னர், அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக திறைசேரிக் குறிப்புக்கள் நிதி அமைச்சரின் ஆலோசனையின் படி திறைசேரி செயலாளரினால் விநியோகிக்கப்பட வேண்டியுள்ளது. பொதுத் திறைசேரிக்காக அந்த அறிக்கை அரச நிதித் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் எதிர்கால நிதி நடவடிக்கைகளின் போது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் இந்த குறிப்புப் பத்திரம் ஆய்வு செய்யப்பட்டு வழிகாட்டியாக பயன்படுத்தப்படுகின்றது. 2005 முதல் 2010 ஆம் ஆண்டு வரையான நிதி ஆண்டிற்காக அந்த அறிக்கைக்காக உரிய குறிப்புகள் விநியோகிக்கப்பட்டதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அத்திகதியின் பின்னர் விநியோகிக்கப்பட்ட அரசாங்க கணக்குகள் குழுவின் அறிக்கைக்குரிய குறிப்புகள் இதுவரை விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2016 இன் பாதீட்டு முன்மொழிவு இலக்கம் 425 மற்றும் 426 இன் பிரகாரம் ஆண்டின் போது சகல நியதிச்சட்ட மற்றும் நியதிச்சட்டரீதியற்ற நிதியங்களை மீளாய்வு செய்வதற்கும் அதன் மூலம் நிதியங்களின் இருப்பை நியாயப்படுத்துவதற்கும், அந்த நிதியங்களுக்குரிய நியதிச்சட்டங்களை தற்போதைய தேவைகளுக்கு ஈடாகும் வகையில் திருத்தம் செய்வதற்கும் மற்றும் அதனோடு நிதியங்களின் பெறுவனவு, கொடுப்பனவுகளை பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிற்கு எடுப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இந்த பணிக்குரியதாகப் பெறப்பட்ட மேலதிக நிதிஏற்பாடு ரூபா 10.80 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 4.13 மில்லியன் அதற்காக நியமிக்கப்பட்ட குழு அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் சகல நியதிச்சட்ட மற்றும் நியதிச்சட்டரீதியற்ற நிதியங்களும் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், குழு அறிக்கைகளின் மூலம் நிதியம், மக்கள் மயப்படுத்தல் மற்றும் மக்கள் மயப்படுத்தப்படாததாக வகைப்படுத்தப்பட்டிருந்ததுடன் மக்கள் மயப்படுத்தப்படாத 105 நிதியங்கள் மீளாய்வின் கீழ் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அந்த மக்கள் மயப்படுத்தப்படாத நிதியங்களில் நியதிச்சட்ட நிதியமும் உள்ளடங்கியிருந்தது. மேலும், சில நிதியங்கள் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்படாதிருந்தமையால் ரூபா 16.97 மில்லியன் பெறுமதியான 10 நிதியங்களுக்காக விஷேட அனுமதியைப் பெற்று தனித்தனியாக மீளாய்வு செய்வதற்காக பின்னர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததாகவும் குழுவினால் அறிக்கையிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பாதீட்டு முன்மொழிவின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை முழுமையாக நிறைவுசெய்வதற்கு திணைக்களம் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) அவ்வாறே நிதியங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பணிகள் / சேவைகள் மேற்கொள்ளக்கூடாது அல்லது அந்த நிதியத்தை பேணிச் செல்வது நியாயமற்றது என்பது குழுவின் அபிப்பிராயமாயின் அந்த நிதியம் 2017 நிதியாண்டு முதல் வருடாந்தம் ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும். அது தொடர்பாக பிரதான குழுவிற்கான அங்கத்தவர்களை நியமிக்கும் கடிதங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், குழு அறிக்கையை விநியோகிப்பதற்கும், பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக அமைச்சரவைக்கு சிபாரிசினை சமர்ப்பிப்பதற்கும் 2017 யூன் மாதம் இறுதிவரையிலும் தாமதமாகியிருந்தது. அதன் பிரகாரம், அந்த எதிர்பார்த்த பணிகளைப் போன்று நிதியங்களின் தொடர்ந்திருத்தலை நியாயமானதாக்குதல்

மற்றும் அந்த நிதியங்களுக்குரிய நியதிச் சட்டங்களை தற்போதைய தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் திருத்தங்களும் இதுவரை இடம்பெற்றிருக்கவில்லை.

## 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தால் பொது 172 பற்றுச்சீட்டுக்குப் புத்தகங்கள் அச்சிடப்பட்டு பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

திணைக்களத்தால் அமைச்சு / திணைக்களத்தின் அரச அலுவலகங்களுக்காக பொது 172 பற்றுச்சீட்டுப் புத்தகம் விநியோகிக்கப்படுகின்றது. ஒரு தடவையில் 10,000 பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் வீதம் அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்படுகின்றது. திணைக்களத்தில் காணப்படுகின்ற இடவசதிகள் போதியளவில் இல்லாமையின் காரணமாக இந்த புத்தகங்கள் திணைக்களத்திற்கு கொண்டுவரப்படாதிருந்ததுடன் அவ்வவ்போது புத்தகங்களின் சிறு எண்ணிக்கை மாத்திரம் கொண்டுவரப்பட்டிருந்தது. அனேக சந்தர்ப்பங்களின் போது பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் அரசாங்க அச்சகத்திலிருந்தே உரிய நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. எனினும், சில சந்தர்ப்பங்களில் இந்த பற்றுச்சீட்டு புத்தகங்கள் தொகுதியாக அச்சகத்திலிருந்து தொலைந்து போயிருந்ததுடன், அச்சகத்திலிருந்து விநியோகிக்கப்பட்ட புத்தகங்கள், தொடர் இலக்க ஒழுங்கு முறையின் பிரகாரம் விநியோகிக்கப்படாதிருந்தமை திணைக்களத்தால் பேணப்பட்டிருந்த பதிவேட்டின் பரீட்சிப்பின் போது வெளிப்படுத்தப்பட்டது. பற்றுச்சீட்டுப் புத்தகம், காசுடன் நேரடியாகத் தொடர்புபடுகின்றமையால், அதற்குரிய முறையான செயல்முறையொன்றைப் பின்பற்றி அறிக்கை பேணிச் செல்லப்பட வேண்டியிருந்த போதிலும், பேணப்பட்டிருந்த அறிக்கைகளில் குறைபாடுகள் மற்றும் நலிவுகள் காணப்பட்டன. அதனால் இதற்காக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.7 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 28 | 17 | 11 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 02 | 00 |
| (iii) | இரண்டாம் நிலை | 33 | 30 | 03 |
| (iv) | ஆரம்ப நிலை | 17 | 14 | 03 |
| | மொத்தம் | 80 | 63 | 17 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கையான 80 பதவிகளில் 17 பதவிகளில் வெற்றிடம் காணப்பட்டமையால் அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கையில் 21 சதவீதமாக இருந்ததுடன் இந்த வெற்றிடங்களில் சிரேஷ்ட

நிலையில் 11 பதவிகள் காணப்பட்டன. எவ்வாறாயினும், நிறுவனக் கட்டமைப்பை மீளமைத்தல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் இந்த வெற்றிடங்களால் பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், பதவியணியினரை மீளாய்வு செய்வது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவியைப் போன்றே மேலதிக பணிப்பாளர் நாயகப் பதவிகளும் பதிற்கடமை நியமன அடிப்படையில் நிரப்பப்பட்டிருந்ததுடன் 03 மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவிகளில் ஒரு பதவி இதுவரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்டது.

(இ) பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்த மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவிக்காக 2013 மே 02 ஆந் திகதி முதல் பெண் உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மேவுகை அங்கீகாரத்தின் கீழ் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான மேவுகை அங்கீகாரமேனும் கணக்காய்வு திகதியான 2017 யூலை 27 ஆந் திகதி வரையிலும் பெறப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இரண்டாம் நிலையின் பதவியொன்றான திட்ட அமுலாக்கல் உதவியாளர் பதவி, அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றில் இல்லாதிருந்த போதிலும், உள்ளபடியான பதவியணியினரில் அந்த பதவியின் 03 உத்தியோகத்தர்கள் பலவருட காலமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதற்குரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சில பதவிகளில் வெற்றிடங்கள் பலவருட காலமாகக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன், அந்த பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் திணைக்களத்தின் நோக்கம் / பணிகளை நிறைவேற்றும் போது இடையூறுகள் ஏற்படுகின்றமை அவதானிக்கப்பட்டிருந்த போதிலும், வெற்றிடங்கள் காணப்படுகின்றமை இடையூறில்லாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக திணைக்களத்தால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.